## பத்திரிக்கைச் செய்தி

## நிலத்தை உட்பிரிவு செய்து வரைபடம் வழங்க லஞ்சம் வாங்கிய குற்றத்திற்காக துணை ஆய்வாளர் சர்வே அவர்களுக்கு 3 வருட சிறை தண்டனை விதித்து தீர்ப்பு

கோயம்புத்தூர் மாவட்டம், குன்னத்தூர், புதூரில் வசித்து வந்த திரு.மகேந்திர பிரபு என்பவர் கடந்த 2012ம் ஆண்டு தன்னுடைய தந்தை நிலத்தினை உட்பிரிவு செய்து வரைபடம் கேட்டு கோயம்புத்தூர் மாவட்டம், வடக்கு தாலுகா அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். இந்த விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.பொன்னுசாமி, முன்னாள் துணை ஆய்வாளர், சர்வே, வடக்கு தாலுகா அலுவலகம், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்கள் தனக்கு லஞ்சமாக ரூ.15,000/-யை கொடுக்குமாறு கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாத புகார்தாரர் கோயம்புத்தூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் திரு.பொன்னுசாமி, முன்னாள் துணை ஆய்வாளர், சர்வே, வடக்கு தாலுகா அலுவலகம், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்கள் மீது புகார் மனு அளித்தார். இதன் பேரில் கோயம்புத்தூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள் பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொண்டு திரு.பொன்னுசாமி, முன்னாள் துணை ஆய்வாளர், சர்வே அவர்களை புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணமான ரூ.15,000/-யை பெற்ற போது கைது செய்தனர். மேலும் இது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கானது கோயம்புத்தூர் மாவட்டம் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இன்று 04.11.2022 இவ்வழக்கில் குற்றவாளி திரு.பொன்னுசாமி, முன்னாள் துணை ஆய்வாளர், சர்வே அவர்கள் புகார்தாரரிடம் லஞ்சம் ரூ.15,000/- லஞ்சம் கேட்ட குற்றத்திற்கு 3 வருடங்கள் கடுங்காவல் சிறை தண்டனையும் ரூ.10,000/- அபராதமும், புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் பெற்றதற்கு 3 வருடங்கள் கடுங்காவல் சிறை தண்டனையும் ரூ.10,000/- அபராதமும் விதித்து, இத்தண்டனைகளை ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது.